**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: MC.7/2022**

**Prosecution Witness: 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : உஷா | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**10.10.2023**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்குத் தெரியும். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் 25.02.2021 அன்று நடைபெற்ற திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.1 ஆகவும், திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் ம.சா.ஆ.2 ஆகவும், காவல் கண்காணிப்பாளர் விருதுநகர் அவர்களுக்கு 06.01.2022 அன்று நான் கொடுத்த புகார் ம.சா.ஆ.3 ஆகவும், மேற்படி புகார் மனு ஏற்பு சான்று ம.சா.ஆ.4 ஆகவும், 29.07.2022 தேதியிட்ட பொது தகவல் அலுவலர் அளித்த தகவல் ம.சா.ஆ.5 ஆகவும், 30.06.2022 தேதியிட்ட என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.6 ஆகவும், என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் சரிபார்க்கபட்டது ம.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்து பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.